9. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 5/73).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியத் (திருத்த) சட்ட முன்வடிவை (*) ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு, வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971-ல் 30-வது பிரிவின்படி) அறிக்கையிடப்பட்ட நாளுக்கு அடுத்து முன்பு, இந்த அரசின் கீழ் (பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப் பணி) தலைமைப் பொறியாளர் அலுவலகம் உட்பட, பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப் பணிகள் துறை அலுவல்கள் சம்பந்தமாக பணியாற்றி வந்திருக்கிற ஒவ்வொருவரும் அந்த நாளிலிருந்து, வாரியம் தொடர்பான வேலையைச செய்ய அனுப்பப்பட்டவரென்று கருதப்பட்டு அவர்கள் அரசுப் பணியாளர்களாக அற்றுப்போகும்.

---

* 20—3—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.